# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly

மக்களுக்கான குரல்

தமிழ் மாத இதழ்

● குரல் – 5 ● இதழ் – 11 ● ஜனவரி, 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/–

● Volume - 5 ● Issue - 11 ● January, 2026 ● Monthly ● Price Rs. 25/-




# தமிழகம் முழுவதும் 70 ஐபிஎஸ் அதிகாரிகள் பணி மாறுதல்

## தமிழ்நாடு சட்டப்பேரவை ஜனவரி 20ந் தேதி கூடுகிறது

பொங்கலை முன்னிட்டு

‘சி’, ‘டி’ பிரிவு ஊழியர், ஓய்வூதியர்

## 9.90 லட்சம் பேருக்கு பொங்கல் பரிசு

பியூஷ் கோயலுடன் இபிஎஸ் ஆலோசனை:

## அதிமுக பாஜக கூட்டணியில் ஓபிஎஸ், டிடிவியை சேர்க்க முடிவு?

## விஜயகாந்த் 2ம் ஆண்டு நினைவு தினம்:

# துணை முதல்வர், அரசியல் தலைவர்கள் அஞ்சலி



சென்னை கோயம்பேடு தேமுதிக தலைமை அலுவலகத்தில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று 2ம் ஆண்டு குருபூஜை நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி, கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா மற்றும் நிர்வாகிகள், தொண்டர் கள் உள்ளிட்டோர், மாநில தேர்தல் ஆணைய அலுவலகத்தில் இருந்து பேரணியாக நினைவிடத்துக்கு வந்து, மரியாதை செலுத்தினர்.

பேரணியில் தேமுதிக பொருளாளர் எல்.கே. சுதீஷ், தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி, விஜயகாந்தின் மகன்கள் விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொடர்ந்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், எ.வ.வேலு ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். இதேபோல, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர்கள் பொன். ராதாகிருஷ்ணன், தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

மேலும், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தவாக தலைவர் வேல்முருகன், ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து, புதிய நீதி கட்சித் தலைவர் ஏ.சி சண்முகம், திராவிட வெற்றிக் கழக தலைமை ஒருங்கிணைப்பாளர் மல்லை சத்யா மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர், திரைப்பட இயக்குநர்கள், நடிகர்கள் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்காக காலை முதலே தேமுதிக நிர்வாகிகளும், தொண்டர் களும் கட்சி அலுவலகத்தில் திரண்டிருந்தனர். அவர் களுடன் பொதுமக்களும் நீண்ட வரிசையில் நின்று, மரியாதை செலுத்தினர்.

முதல்வர் மு.க.ஸ்டா லின் வெளியிட்ட சமூக வலைதள பதிவில், ‘ஏழைகள் மீது பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் உயர்ந்த உள்ளத் தால் தமிழ்மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற அருமை நண்பர் விஜயகாந் தின் நற்பணி களை நினைவு கூர்கிறேன்’ என தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வெளியிட்ட சமூக வலைதள பதிவில், ‘இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே என்ற கோட்பாட்டுடன் வாழ்ந்த விஜயகாந்தின் நினைவுநாளில் கலைத் துறையிலும், பொதுவாழ்விலும் அவர் நிகழ்த்திய சாதனைகளை நினைவுகூர்கிறேன்’ என கூறியுள்ளார். இதேபோல, அமமுக பொதுச் செய லாளர் டிடிவி. தினகரன், பாமக தலைவர் அன்பு மணி, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன், தவெக தலைவர் விஜய் உள்ளிடோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY — தமிழ் மாத இதழ்

● குரல் – 5 ● இதழ் – 11 ● ஜனவரி, 2026 ●தமிழ் மாத இதழ் ●விலை ரூ.25/-

●Volume-5 ●Issue-11 ●January,2026 ●Monthly ●Price Rs.25/-



நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்

**G.B. பச்சையப்பன்**

கௌரவ ஆசிரியர்

டாக்டர் M.A.M.**ராமசாமி** அவர்களின்

முன்னாள் முதன்மைச் செயலாளருமான

செட்டிநாடு **S. ராஜேந்திரன்**

ஆலோசகர்கள்

நிதில் & கோ S.R.P. ராஜன்

நடிகர் பயில்வான் ரங்கநாதன்

R. கதிரவன்

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்

R. ரிச்சர்ட் ராஜ், K. முகமது அலி

S. சதீஷ்குமார், K. குட்டி கிருஷ்ணன்

L. லிங்கேஷ்வரன்

G.K. பாண்டியநேரு (தேனி)

குரு பாண்டியன் (திண்டுக்கல்)

நிருபர்கள்

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

G. ராஜ்குமார் (விருதுநகர்)

P. ஆகாஷ் (சென்னை)

M. ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

K. தினேஷ் (மத்திய சென்னை)

M. தினேஷ்

கா.சுடர்மதி (காஞ்சிபுரம்)

புகைப்பட கலைஞர்

எ. சங்கர்

VRJ Graphics — பக்க வடிவமைப்பு: 90941 19636

நிர்வாக மேற்பார்வையாளர்கள்

P. அஜய் B.Com., MBA., P. ஆகாஷ் B.Com.,

சட்ட ஆலோசகர்கள்

E. யோபு M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. நவீன் சந்தர் B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. பார்த்திபன் B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)



பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600004

தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025



அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


# ஆசிரியர் கடிதம்...

## ஒரு சமூகத்தின் சிந்தனை வளர்ச்சிக்கு கலைகள் முக்கியம்




சமூக வளர்ச்சிக்குப் பொருளாதாரம், உற்பத்தி எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவுக்கு, ஒரு சமூகத்தின் சிந்தனை வளர்ச்சிக்குக் கலைகள் முக்கியம் என தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை - கவின்கலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும்; "சமூக வளர்ச்சிக்குப் பொருளாதாரம், உற்பத்தி எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவுக்கு, ஒரு சமூகத்தின் சிந்தனை வளர்ச்சிக்குக் கலைகள் முக்கியம்!

இன்று பட்டம் பெற்ற மாணவர்கள் காலத்தை வெல்லும் படைப்புகளைத் தந்து, தமிழ்ச் சமூகத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுத் தேருங்கள்! அதேவேளை, எந்த கிமி வந்தாலும் மனிதக் கற்பனையின் விரிவை வென்றுவிட முடியாது என்பதை உணர்ந்தவர்களாக உங்களது கலைப்பயணம் அமையட்டும்.

வள்ளுவர் தொடங்கி இசைஞானி வரை கலைகளை, கலைஞர்களை மதித்துப் போற்றும் நமது திராவிட மாடல் அரசு உங்களது முயற்சிகளுக்குத் துணைநிற்கும்" என முதலமைச்சர் பதிவிட்டுள்ளார்.

பட்டம் பெற்ற மாணவர்கள் காலத்தை வெல்லும் படைப்புகளைத் தந்து, தமிழ்ச் சமூகத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

சமூக வளர்ச்சிக்குப் பொருளாதாரம், உற்பத்தி எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவுக்கு, ஒரு சமூகத்தின் சிந்தனை வளர்ச்சிக்குக் கலைகள் முக்கியம். பட்டம் பெற்ற மாணவர்கள் காலத்தை வெல்லும் படைப்புகளைத் தந்து, தமிழ்ச் சமூகத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று மாணவர்களுக்கு நல்வாழ்த்துக்களை சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். ●



**G.B.பச்சையப்பன்**
தலைமை ஆசிரியர்



## டெல்லி கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெற்ற

# கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி !

டெல்லி கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் மோடி பிரார்த்தனையில் பங்கேற்றார்.

கிறிஸ்துமஸ் பண்டிகை நேற்று உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்தியாவிலும் பல்வேறு கலாச்சார பின்னணி கொண்டவர்கள் ஒன்றிணைந்து இவ்விழாவைக் கொண்டாடினர். இதையொட்டி, டெல்லியில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தில் நேற்று காலையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

டெல்லி மற்றும் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஏராளமான கிறிஸ்தவ மக்களுடன் இணைந்து அவர் பிரார்த்தனைகளில் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் திருவிழாவுக்குரிய மகிழ்ச்சி, சிந்தனை மற்றும் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் பிரார்த்தனைகள், கிறிஸ்துமஸ் பாடல்கள் மற்றும் கீர்த்தனைகள் இடம்பெற்றன. மேலும், டெல்லி பிஷப் மேதகு பால் ஸ்வரூப் பிரதமருக்காகச் சிறப்புப் பிரார்த்தனை செய்தார்.


இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “டெல்லியில் உள்ள ‘தி கதீட்ரல் சர்ச் ஆஃப் தி ரிடெம்ப்ஷன்’ தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் காலை வழிபாட்டில் கலந்து கொண்டேன். இந்த வழிபாடு











அன்பு, அமைதி மற்றும் கருணை ஆகிய காலத்தால் அழியாத செய்தியைப் பிரதிபலித்தது. கிறிஸ்துமஸ் பண்டிகையின் உணர்வு நம் சமூகத்தில் நல்லிணக்கத்தையும் நல்லெண்ணத்தையும் ஊக்குவிக்கட்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில், “அனைவருக்கும் அமைதி, கருணை மற்றும் நம்பிக்கை நிறைந்த மகிழ்ச்சியான கிறிஸ்துமஸ் வாழ்த்துகள். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் நம் சமூகத்தில் நல்லிணக்கத்தை வலுப்படுத்தட்டும்” என்று குறிப்பிட்டிருந்தார்.

# சிறுபான்மை மக்களுக்கு

# திமுக துணையாக இருக்கும்

## கிறிஸ்துமஸ் விழாவில் முதல்வர் ஸ்டாலின் உறுதி



**சென்னை:** சிறுபான்மையின மக்களுக்கு துணையாக திமுகவும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியும் உறுதியாக இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். திமுக சென்னை கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா சென்னை பெரம்பூரில் நேற்று நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், 3,250 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து அவர் பேசியதாவது: அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். சிறுபான்மையின மாணவர்களுக்காக 14 கல்லூரி விடுதிகளில் நூலகம், உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு கருவிகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளோம்.

வெளிநாடுகளில் உயர்கல்வி பயில சிறப்பான திட்டம், 456 சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அந்தஸ்து, ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செய்வதற்கான மானியம் உயர்வு, ரூ.2.87 கோடியில் 44 தேவாலயங்கள் புனரமைப்பு உட்பட பல்வேறு திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தி உள்ளது.

அதேபோல், 2019 முதல் 2024 வரை செயல்பட்டுவரும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிமுறைகள் 2019ன்படி உள்ள மதச்சார்பான கட்டிடங்களுக்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதியை வலியுறுத்தாமல் இனி திட்ட அனுமதி வழங்கப்படும்.

இந்த காலத்தில் திட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள மதச்சார்பான கட்டிடங்களுக்கும் இது பொருந்தும் என்ற அறிவிப்பை தற்போது வெளியிடுகிறேன்.

இன்றைக்கு சிறுபான்மையின மக்கள் எத்தகைய அச்ச உணர்வோடு வாழ்கிறார்கள் என்று நான் சொல்லி தெரியவேண்டிய அவசியமில்லை. இந்த நாட்டின் குடிமக்களுக்கே அச்சத்தை வரவைக்கும் சர்வதிகார சக்திகளை எதிர்க்கும் திறனும், உணர்வும் திமுகவுக்குதான் உள்ளது. உங்களுக்கு துணையாக திமுகவும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியும் உறுதியாக இருக்கும். அதேபோல், என்றைக்கும் நீங்கள் எங்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

# திமுக ஆட்சியில் சிறுபான்மையினருக்கு நலத்திட்டங்கள் மறுப்பு

## அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றச்சாட்டு




அதிமுக சார்பில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள சிஎஸ்ஐ தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்று ஏழை, எளிய மக்களுக்கு தையல் இயந்திரம், இஸ்திரிப்பெட்டி, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்றுசக்கர வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், இனிப்புகள் அடங்கிய பரிசுப் பைகளை வழங்கினார்.

பின்னர், நிகழ்ச்சியில் பழனிசாமி பேசியதாவது: பரம்பரையாக தாங்களே பதவி சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, வாக்கு வங்கிக்காக ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு வரும் ஓநாய் கூட்டத்தினரிடம் சிறுபான்மையினர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீய சக்திகளிடம் நாம் ஏமாந்து போய்விட்டால், பின்னர் 'விடியல்' என்பதே இருக்காது. தமிழகம் இருளில் மூழ்கி விடும். எனவே நாம் விழிப்புடன் செயல்படும் காலம் இது.

சிறுபான்மை மக்களுக்கு அதிமுக அரசின் மூலம் கிடைத்து வந்த பல நலத்திட்டங்கள் திமுக ஆட்சிக்கு வந்த இந்த 55 மாத காலத்தில் கிடைப்பதில்லை. எம்ஜிஆர் தொடங்கி, இன்று வரை சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சமூக நல்லிணக்க இயக்கம் அதிமுக. சிறுபான்மை மக்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கும் இயக்கம். எனவே, சிறுபான்மை சமுதாய மக்கள் வரும் தேர்தலில் விழிப்போடு செயல்பட்டு தீய சக்திகளை அடையாளம் கண்டு, அவர்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அப்புறப்படுத்தி, தமிழகத்தில் நடக்கும் சீர்கேட்டை களைய அதிமுகவுக்கு முழு ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், செம்மலை, நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஜெயக்குமார், வைகைச் செல்வன், பெஞ்சமின், இன்பதுரை எம்.பி. மாவட்டச் செயலாளர்கள் தி.நகர் சத்யா, வி.எஸ்.பாபு உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பியூஷ் கோயலுடன் இபிஎஸ் ஆலோசனை:

# அதிமுக பாஜக கூட்டணியில் ஓபிஎஸ், டிடிவியை சேர்க்க முடிவு?



தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் மற்றும் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி ஆகியோர் சென்னையில் நேற்று ஆலோசனை நடத்தினர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் பொறுப்பாளராக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், இணை பொறுப்பாளர்களாக மத்திய இணை அமைச்சர்கள் அர்ஜுன் ராம் மேக்வால், முரளிதர் மொஹோல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழகத்துக்கு முதல் முறையாக நேற்று வந்தனர்.

சென்னை விமான நிலையத்துக்கு வந்த பியூஷ் கோயலை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் வரவேற்றனர். பின்னர் தி.நகரில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்துக்கு பியூஷ் கோயல் வந்தார். முன்னதாக, நயினார் நாகேந்திரன் வீட்டில் அர்ஜுன் ராம் மேக்வால் ஆலோசனை நடத்தினார். அப்போது, அதிமுக முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜுவும் உடனிருந்தார்.

பின்னர், அவர்களும் பாஜக தலைமை அலுவலகம் வந்தனர். இதையடுத்து, மாநில மையக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மேலிட பொறுப்பாளர்கள் சுதாகர் ரெட்டி, அரவிந்த் மேனன், மூத்த தலைவர்கள் ஹெச்.ராஜா, தமிழிசை, வானதி சீனிவாசன், விஜயதரணி உள்ளிட்டோரும் பங்கேற்றனர். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பாஜக போட்டியிடும் தொகுதிகள், பாமக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகளுடனான கூட்டணி பேச்சுவார்த்தை, ஒருங்கிணைப்பு மற்றும் தமிழக அரசியல் கள நிலவரம், வெற்றி வாய்ப்பு குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மையக் குழு கூட்டத்தை

முடித்துவிட்டு, பியூஷ் கோயல், அர்ஜூன் ராம் மேக்வால், நயினார் நாகேந்திரன், சுதாகர் ரெட்டி, அரவிந்த் மேனன், எல்.முருகன் ஆகியோர் எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர விடுதிக்கு சென்றனர். அங்கு, அதிமுக

பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி, தங்கமணி ஆகியோருடன் ஆலோசனை நடத்தினர்.



இந்த ஆலோசனையின் போது, தொகுதி பங்கீடு, கூட்டணி, தமிழக அரசியல் கள நிலவரம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து, ஓபிஎஸ், டிடிவி தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்ப்பது குறித்தும் ஆலோசித்தனர். அப்போது, இருவரையும் கூட்டணியில் சேர்க்க பழனிசாமி ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, வெளியே வந்த நயினார் நாகேந்திரன், "பேச்சு வார்த்தை சுமூகமாக முடிந்தது" என்றார். பின்னர் பியூஷ் கோயல் கூறியதாவது: பிரதமர் மோடியின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும் என்று மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

தமிழகத்தில் பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், மீனவர்கள், சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர், தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் என அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை வழங்கும் வளர்ச்சியை மையமாகக் கொண்ட அரசை உருவாக்குவதே தேசிய ஜனநாயக கூட்டணியின் இலக்கு. இது பிரதமர் மோடியின் உறுதிமொழி. அதிமுக, பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிற தோழமைக் கட்சிகள் அனைத்தும் இணைந்து, தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத் துக்காகப் பணியாற்றும்.

இவ்வாறு பியூஷ் கோயல் கூறினார். அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியதாவது: தமிழகத்தில் தற்போது நிலவி வரும் அரசியல் நிலவரங்கள் குறித்து பியூஷ் கோயல் விரிவாக கேட்டறிந்தார். 2026 சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக, பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒருங்கிணைந்து எவ்வாறு செயல் பட வேண்டும் என்பது குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக, பாஜக மற்றும் கூட்டணி கட்சிகள் இணைந்து மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்ற வேண்டும்.

அதற்கான திட்டங்களை வகுக்க ஆரம்பகட்ட பேச்சு வார்த்தை நடத்தியுள்ளோம். இன்று தமிழகம் முழுவதும் மக்கள் ஒரு கொந்தளிப்போடு இருக்கின்றனர். இந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். அதற்கு தேவையான நட வடிக்கைகளை அதிமுக, பாஜக மற்றும் கூட்டணி கட்சிகள் இணைந்து எடுக்கும். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக, பாஜக தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணி மிகப் பெரிய வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் தமிழக பாஜக நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருந்தது. ஆனால், நேரமின்மை காரணமாக இந்த கூட்டம் ரத்து செயயப்பட்டது. இதையடுத்து, கிண்டி ஆளுநர் மாளிகை சென்ற பியூஷ், ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்து தேநீர் விருந்தில் பங்கேற்றார்.

கமலாலயத்தில் அறிவுரை: கமலாலயத்தில் நடைபெற்ற பாஜக மையக் குழு கூட்டத்தில், திமுக கூட்டணி, விஜய்யின் அரசியல் நகர்வுகள் குறித்து பியூஷ் கோயல் கேட்டறிந்தார். அப்போது, திமுகவின் சிறுபான்மை வாக்குகளை விஜய் பிரித்து விடுவார். இதனால், திமுகவுக்கு தான் பாதிப்பு. எனவே, இனி, விஜய்யை கூட்டணிக்கு அழைப்பது குறித்தோ, அவரை விமர்சித்தோ யாரும் கருத்து தெரிவிக்கக் கூடாது என பாஜகவினருக்கு பியூஷ் கோயல் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

# பழனிசாமியின் தலைமையை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

## ஓ.பன்னீர்செல்வம் திட்டவட்டம்




**சென்னை:** பழனிசாமியின் தலைமையை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழக மாவட்ட செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று நடந்த இக்கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது: எம்ஜிஆர் அதிமுகவை தொண்டர்களுக்காக உருவாக்கி அமோக வெற்றிபெற்று 3 முறை முதல்வராக பதவி வகித்தார். அதன்பிறகு கட்சிப்பொறுப்பை ஏற்ற ஜெயலலிதாவும் 30 ஆண்டுகளாக அதிமுகவை கட்டுக்கோப்பாக வழிநடத்தி யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக தொடர்ந்து முதல்வராக பதவி வகித்தார்.

ஆனால் அதன்பிறகு தொண்டர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர்கள் பதவி உருவாக்கப்பட்டது. ஆனால் திடீரென தனக்கென ஒரு ஆதரவுக் கூட்டத்தை உருவாக்கி, பழனிசாமி தலைமையில் ஒற்றைத் தலைமை இருந்தால்தான் வெற்றி பெறமுடியும் எனக் குரல் எழுப்பி, போலியான பொதுக் குழுவைக் கூட்டி அதிமுகவை படுபாதாளத்துக்கு பழனிசாமி தள்ளிவிட்டார்.

அவருடைய கட்டுப்பாட்டில் கட்சி சென்ற பிறகு கடந்த எம்.பி. தேர்தலில் 7 இடங்களில் அதாவது 48 சட்டப் பேரவை தொகுதிகளில் டெபாசிட்டை இழந்தது. 14 எம்.பி. தொகுதிகளில் மூன்றாடம் இடத்துக்கு அதிமுக தள்ளப்பட்டுள்ளது. பழனிசாமி வெற்றி பெறுவார் என மாயையை உருவாக்கி விட்டனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும். தற்போது தொண்டர்கள் எங்கு செல்வது என தெரியாமல் திக்குமுக்காடிப் போய் உள்ளனர். இங்கு பேசிய ராமச்சந்திரன், வைத்திலிங்கம் போன்றோர் பழனிசாமி அங்கம் வகிக்கும் கூட்டணி வேண்டாம் என்றும், பழனிசாமியின் தலைமையை ஏற்க மாட்டோம் என்றும் எரிமலையாக வெடித்துவிட்டு தங்களது உள்ளக் குமுறலை உணர்ச்சி பெருக்குடன் தெரிவித்து சென்றுள்ளனர். அவர்களின் உணர்வுகளை அப்படியே நானும் வழிமொழிகிறேன். பழனிசாமிக்கு பாடம் புகட்டுவோம். மக்கள் நம் மீது மிகுந்த அக்கறையும், நம்பிக்கையும் வைத்துள்ளனர். இவ்வாறு பேசினார்.

முன்னதாக, குன்னம் ராமச்சந்திரன் பேசும்போது 3 சீட்டுக்காக இபிஎஸ் அணியில் இடம்பெறத் தேவையில்லை என்றும் வைத்திலிங்கம் பேசும்போது, அதிமுவை குரங்கு கையில் கிடைத்த பூ மாலையாக மாற்றிவிட்டார் பழனிசாமி என்றும் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

நாடு முழுவதும்

# ரயில் கட்டணம் உயர்கிறது

## புறநகர் ரயில், சீசன் கட்டணத்தில் மாற்றம் இல்லை

நாடு முழுவதும் வரும் 26ம் தேதி முதல் ரயில் கட்டணம் கி.மீ.க்கு 1 முதல் 2 பைசா வரை உயர்கிறது. புறநகர் ரயில், மாதாந்திர சீசன் கட்டணத்தில் மாற்றம் இல்லை.

ரயில் கட்டணம் கடந்த ஜூலை மாதம் சிறிய அளவில் உயர்த்தப்பட்டது. இந்நிலையில், நடைமுறைச் செலவுகள் அதிகரித்து வருவதை சமாளிக்க, நீண்டதூரப் பயணத்துக்கான கட்டணத்தை உயர்த்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

அதன்படி சாதாரண ரயில்களில் 215 கி.மீ. தூரத்துக்கு மேற்பட்ட பயணத்துக்கான கட்டணம் கி.மீ.க்கு 1 பைசா உயர்த்தப்படும். மெயில் மற்றும் விரைவு ரயில்களில் பயணம் செய்வோருக்கான கட்டணம் கி.மீ.க்கு 2 பைசா உயர்த்தப்படும்.

இந்த கட்டண உயர்வு டிசம்பர் 26ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், புறநகர் ரயில் கட்டணம் மற்றும் மாதாந்திர சீசன் கட்டணம் ஆகியவற்றில் மாற்றம் இல்லை. அதேபோல, சாதாரண ரயில்களில் 215 கி.மீ. தூரம் வரை பயணிப்பவர்களுக்கும் கட்டண உயர்வு இல்லை.

இதுகுறித்து ரயில்வே உயர் அதிகாரிகள் கூறியுள்ளதாவது: "ரயில் கட்டண உயர்வு பயணிகளுக்கு சிறிய அளவிலேயே தாக்கத்தை ஏற்படுத்தும். உதாரணமாக ஏ.சி. பெட்டியில் 500 கி.மீ. தூரம் பயணம் செய்வோருக்கான கட்டணம் ரூ.10 மட்டுமே அதிகரிக்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே நெட்வொர்க் மற்றும் செயல்பாடுகள் கணிசமாக விரிவடைந்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டண உயர்வு மூலம் ரயில்வே துறைக்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.600 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

அதிகரித்து வரும் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, பணியாளர்கள் எண்ணிக்கையை ரயில்வே அதிகரித்துள்ளது. இதனால், சம்பளச் செலவு ரூ.1.15 லட்சம் கோடியாகவும், ஓய்வூதியச் செலவு ரூ.60,000 கோடியாகவும் உயர்ந்துள்ளது. 2024 25 நிதி ஆண்டில் ரயில்வேயின் மொத்த செயல்பாட்டுச் செலவு ரூ.2.63 லட்சம் கோடியை எட்டியுள்ளது.

அதிகரித்து வரும் செலவுகளைச் சமாளிக்க, சரக்கு போக்குவரத்து வருவாயை அதிகரிப்பதிலும், குறிப்பிட்ட அளவிலான கட்டணச் சீரமைப்பை செயல்படுத்துவதிலும் ரயில்வே கவனம் செலுத்தி வருகிறது. பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் முதலீடுகளால், சரக்குப் போக்குவரத்தில் உலகின் 2வது மிகப்பெரிய ரயில்வே அமைப்பாக இந்தியா உருவெடுத்துள்ளது." இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ●



**2-ம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில் உத்தேச கட்டண விவரம்**

| ஊர்கள் | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|
| சென்னை - கோவை | ரூ.330 | ரூ.340 |
| சென்னை - மதுரை | ரூ.330 | ரூ.340 |
| சென்னை - திருநெல்வேலி | ரூ.405 | ரூ.418 |
| சென்னை - கன்னியாகுமரி | ரூ.430 | ரூ.444 |
| சென்னை - தென்காசி | ரூ.405 | ரூ.418 |
| சென்னை - தூத்துக்குடி | ரூ.405 | ரூ.418 |

### பொங்கலை முன்னிட்டு ‘சி’, ‘டி’ பிரிவு ஊழியர், ஓய்வூதியர்

# 9.90 லட்சம் பேருக்கு பொங்கல் பரிசு

## ரூ.184 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவு




தமிழக அரசில் பணியாற்றும் குரூப் ‘சி’, மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்களுக்கு பொங்கல் போனஸ்,குரூப் ‘சி’, ‘டி’ பிரிவு ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்க ரூ.183.86 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதனால், அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் என மொத்தம் 9.90 லட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசில் பல்வேறு துறைகளின் கீழ் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு ஆண்டுதோறும் மத்திய அரசு அறிவிக்கும் அகவிலைப் படியை பின்பற்றி, அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப்படி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.

3 சதவீத ஊதிய உயர்வு: ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் 3 சதவீதம் ஊதிய உயர்வும் அடிப்படை ஊதியத் துடன் இணைக்கப்படுகிறது. இதுதவிர, ஆண்டுதோறும் அரசு ஊழியர்கள், தலைமை ஆசிரியர்கள், பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பும் அனுமதிக்கப் படுகிறது. இதை மார்ச் மாதம் சரண்டர் செய்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணமாகப் பெற்று வந்தனர்.

கடந்த கரோனா காலகட்டத்தில் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டது. அதன்பிறகு, இந்த ஆண்டு முதல், ஓராண்டுக்கான ஈட்டிய விடுப்பை சரண் செய்து பெறும் வசதியை தமிழக அரசு அனுமதித்துள்ளது. இது அரசு ஊழியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது மட்டுமின்றி, அரசு ஊழியர்களில் ‘சி’, ‘டி’ பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ஆண்டுதோறும் பொங்கல் போனஸ் ரூ.3,000 மற்றும்ரூ.1,000 என்ற வகையில் வழங்கப்படுகிறது.

பண்டிகை முன்பணம்: அதே நேரம், இதர பிரிவினருக்கு பண்டிகை முன்பணமாக ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. இது தற்போது ரூ.20 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. ‘சி’, ‘டி’ பிரிவினருக்கு வழங்கப்படும் பொங்கல் போனஸ் பிடித்தம் செய்யப்படாது. அதே நேரம், பண்டிகை முன்பணம், மாதா மாதம் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

இந்நிலையில், வரும் 15ம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, தமிழக அரசின் குரூப் ‘சி’, ‘டி’ பிரிவு பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் உள்ளிட்டோருக்கு பொங்கல் போனஸ் மற்றும் பொங்கல் பரிசுத் தொகையை வழங்க நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: அரசின் முன்னோடி திட்டங்கள் இந்தியாவுக்கே வழிகாட்டக்

கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்களது ஆற்றலையும் அறிவையும் பெருக்க ‘நான் முதல்வன்’ திட்டம் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவர்களுக்கு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை தீட்டி, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.

நாடுபோற்றும் இத்திட்டங் களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்க்க அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர் கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள், தமிழர்திருநாளாம் பொங்கல் திருவிழாவை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024 25ம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் பொங்கல் பரிசு வழங்கரூ.183.86 கோடி நிதி ஒதுக்கிமுதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசின் இந்த அறிவிப்பால், அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் என மொத்தம் 9.90 லட்சம் பேர் பயன் பெறுவார்கள். இந்த உத்தரவின்படி, ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவை (சி - ஞ் நிகூஷீஷ்ஞு ஜீ) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3 ஆயிரம் என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

தொகுப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 202425 ம் நிதிஆண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்து சில்லறைச் செலவினத்தின்கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும். ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவை சார்ந்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள், முன்னாள் கிராமஅலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் அனைத்து வகைதனி ஓய்வூதியர்கள் ஆகியோருக்கு ரூ.1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. ●

# உழைப்புக்கு உரிய அங்கீகாரம் இல்லையா?

## விஜய்யின் காரை மறித்து நியாயம் கேட்ட பெண் நிர்வாகி

தனக்கு மாவட்டச் செயலாளர் பதவி வழங்காததால் அதிருப்தியில் தவெக தலைவர் விஜய்யின் காரை பெண் நிர்வாகி ஒருவர் தனது ஆதரவாளர்களுடன் வழிமறித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தவெகவில் ஏற்கெனவே 120 மாவட்டச் செயலாளர்கள் அறிவிக்கப்பட்டனர். இருப்பினும் தூத்துக்குடி உட்பட சில மாவட்ட தொகுதிகளுக்கான மாவட்டச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் நியமனம் அறிவிக்கப்படாமல் இருந்தது. இதையொட்டி மீதமுள்ள மாவட்டங்களுக்கான மாவட்டச் செயலாளர்களை அறிவிக்கும் நிகழ்ச்சி பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கட்சி தலைவர் விஜய் தலைமை வகித்து புதிய மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவிப்பாணைகளை வழங்கினார்.

இதையொட்டி கட்சி நிர்வாகிகள் காலை முதலே பனையூரில் திரளாக குவிந்தனர். இதற்கிடையே தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளராக சாமுவேல் என்பவர் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியானது. அந்தப் பதவி தனக்கு வழங்கப்படும் என எதிர்ப்பார்த்து காத்திருந்த பெண் நிர்வாகியான அஜிதா ஆக்னல், பட்டியலில் தன் பெயர் இல்லாததால் அதிருப்தியில் தனது ஆதரவாளர்களுடன் கட்சி அலுவலகத்துக்கு வந்து விஜய்யை சந்தித்து பேச முற்பட்டார்.

ஆனால், பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. கட்சியின் நீண்ட காலம் உழைத்தவர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை என நிர்வாகி அஜிதா கண்ணீர் மல்க தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். தொடர்ந்து பனையூர் அலுவலகத்துக்கு வருகை தந்த விஜய்யின் காரை ஆதரவாளர்களுடன் வழிமறித்து அவரிடம் பேச முற்பட்டார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக அவரை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். எனினும் கட்சி அலுவலகம் முன்பு அஜிதா தனது ஆதரவாளர்களுடன் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார்.



பின்னர், கட்சியின் இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் அஜிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி விஜய்யிடம் பேசிக்கொள்ளலாம் எனச் சொல்லி அனுப்பி வைத்தார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் நிர்மல்குமார் கூறியதாவது:

கட்சியில் பொறுப்புகள் வழங்கும் போது ஒரு சில இடங்களில் அதிருப்தி வருவது இயல்புதான். இது எல்லா கட்சிகளிலும் இருக்கக் கூடியது தான். கடந்த வாரம் கூட திமுக முன்னாள் எம்எல்ஏ ஒருவர் முதல்வரை பார்க்க முடியாததால், அறிவாலயத்தின் வெளியே தனது உறுப்பினர் அட்டையை தூக்கி எறிந்துவிட்டுச் சென்றார். இவ்வாறு கட்சிகளில் ஒவ்வொருத்தருக்கும் ஒரு மனவருத்தம் இருக்கும். திமுகவை விட தவெகவில் ஜனநாயகம் அதிகமாக உள்ளது. அதிகளவில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். யார், யாருக்கு என்ன பதவி கொடுக்க வேண்டுமோ, கட்சி தலைவர் முடிவெடுத்து வழங்கி வருகிறார். கட்சிக்காக உழைத்தவர்கள் யாரையும் விஜய் கைவிடமாட்டார். அனைவரையும் அரவணைப்பார் என்றார்.

## 100 நாள் வேலை திட்டத்துக்கு மாற்றாக விபி ஜி ராம் ஜி திட்டம்

# மக்களவையில் மசோதா நிறைவேற்றம்

### எதிர்க்கட்சிகள் கடும் அமளி; நகலை கிழித்து சபாநாயகர் மீது வீச்சு; நாள் முழுவதும் அவை ஒத்திவைப்பு



எதிர்க் கட்சிகளின் கடும் அமளிக்கு மத்தியில் 100 நாள் வேலை திட்டத்திற்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட விபி ஜி ராம் ஜி மசோதா மக்களவையில் நிறைவேறியது. எதிர்க்கட்சி எம்பிக்கள் மசோதா நகலை கிழித்து சபாநாயகரை நோக்கி வீசி எறிந்தனர். அமளி நீடித்ததால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு திட்டத்தை உறுதி செய்யும் வகையில் 2005ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்டது.

இதன் மூலம் ஆண்டுக்கு 100 நாள் வேலை வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு மாற்றாக விக்சித் பாரத் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்கான உத்தரவாத (கிராமப்புற) (விபிஜி ராம் ஜி) மசோதா மோடி அரசால் மக்களவையில் கொண்டு வரப்பட்டது. இதில் 100 நாட்களுக்கு பதில் 125 நாள் வேலை வழங்கப்படும், விபிஜி ராம் ஜி சட்டம் அமலுக்கு வந்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள், மாநிலங்கள் புதிய சட்டத்தின் விதிகளுக்கு இணங்க ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்த புதிய மசோதா அடிப்படையில் 60:40 சதவீத அடிப்படையில் ஒன்றிய, மாநில அரசுகள் நிதி வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. மேலும் திட்டத்தில் இருந்த மகாத்மா காந்தி பெயர் நீக்கப்பட்டு விபி ஜி ராம் ஜி என்ற பெயரால் மசோதா




அழைக்கப்பட்டதும் எதிர்க்கட்சிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

டிச.16 அன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதாவை வாபஸ் பெறும்படி எதிர்க்கட்சிகள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்தன. ஆனால் அதை மோடி அரசு ஏற்கவில்லை. மேலும் மசோதா மீது தொடர் விவாதம் நடந்து வந்தது. இதை தொடர்ந்து ஜி ராம் ஜி மசோதாவிற்கு எதிராக நேற்று நாடாளுமன்ற வளாகத்திற்குள் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டனப் பேரணி நடத்தினர். பிரம்மாண்ட பதாகையை ஏந்தியபடி, காந்தி சிலையிலிருந்து நாடாளுமன்ற வளாகம் வரை பேரணியாகச் சென்ற எம்பிக்கள் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத்தலைவர் சோனியாகாந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச் செயலாளர் கே. சி. வேணுகோபால், திமுகவின் கனிமொழி, டி. ஆர். பாலு, ஆ. ராசா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் இ. டி. முகமது பஷீர், சிவசேனா (உத்தவ் தாக்கரே பிரிவு) அரவிந்த் சாவந்த், ஆர்.எஸ்.பி.யின் என். கே. பிரேமச்சந்திரன் உள்ளிட்டோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். அதை தொடர்ந்து மக்களவை கூடியதும் விபி ஜி ராம் ஜி மசோதாவுக்கு எதிராக எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து கோஷங்கள் எழுப்பினர்.

அமளிக்கு மத்தியில் மசோதா மீது நடந்த 8 மணி நேர விவாதத்திற்கு பதில் அளித்து வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் பேசியதாவது: மகாத்மா காந்தி போற்றிய கொள்கைகளை எதிர்க்கட்சியான காங்கிரஸ் பலமுறை கொன்றுவிட்டது. அரசியல் ஆதாயங்களுக்காக மட்டுமே காங்கிரஸ் அவரது பெயரைப் பயன்படுத்தி வருகிறது. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா, உஜ்வாலா யோஜனா, ஸ்வச் பாரத் இயக்கம், ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட உறுதியான வீடுகள் மூலம் மகாத்மா காந்தியை வாழ வைக்கிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்த திட்டம் கொண்டு வரப்பட்ட போது தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் என்று தான் பெயரிட்டது. அப்போது மகாத்மா காந்தியின் பெயர் சேர்க்கப்படவில்லை. பின்னர் 2009 பொதுத் தேர்தல் வந்தபோது, வாக்குகளைப் பெறுவதற்காக காங்கிரஸ் கட்சிக்கு மகாத்மா காந்தியின் நினைவு வந்தது. விபிஜி ராம் ஜி மசோதா மூலம் வேலைவாய்ப்பை மேம்படுத்த நாங்கள் ஏற்பாடு களைச் செய்துள்ளோம். இதில் உருவாக்கப்படும் அனைத்து சொத்துக்களும் விக்சித் பாரத் தேசிய கிராமப்புற உள்கட்டமைப்புத் தொகுப்பில் ஒருங்கிணைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

அப்போது மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதற்கு எதிராக அரசாங்கத்திற்கு எதிராக முழக்கங்களை எழுப்பிய எதிர்க்கட்சி எம்பிக்கள், அவை யின் மையப்பகுதிக்குச் சென்று, விபிஜி ராம் ஜி மசோதாவின் பிரதிகளை கிழித்து, சபாநாயகரை நோக்கி வீசினர். அப்போது குறுக்கிட்ட சிவராஜ்சிங் சவுகான், ' எதிர்க்கட்சியினர் காந்தியின் லட்சியங்களைக் கொலை செய்கிறார்கள். நான் நேற்று அதிகாலை 1:30 மணி வரை எம்பிக்களின் பேச்சைக் கேட்டேன். உங்கள் கருத்தை மட்டும் கூறிவிட்டு, மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்காமல் இருப்பதும் ஒரு வகை வன்முறைதான்' என்றார்.

காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், மசோதாவை முழுமையாக ஆய்வு செய்ய நாடாளுமன்றக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று சபாநாயகர் ஓம் பிர்லாவை வலியுறுத்தினார். ஆனால் புதன்கிழமை இரவு நள்ளிரவு கடந்தும் கட்சி வேறுபாடின்றி 98 உறுப்பினர்கள் விரிவாகப் பேசியதாகவும் கூறிய, ஓம்பிர்லா அந்த கோரிக்கையை நிராகரித்தார். இதையடுத்து எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில், குரல் வாக்கெடுப்பு மூலம் விபிஜி ராம் ஜி மசோதாவை மக்களவை நிறைவேற்றியது. மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, சபாநாயகர் ஓம்பிர்லா மக்களவையை நாள் முழுவதும் ஒத்திவைத்தார். மாநிலங் களவையில் நேற்று மாலை 6.40 மணிக்கு விவாதம் தொடங்கியது. ●

## காங்கிரஸ் செயற்குழு கூடுகிறது

காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட முடிவெடுக்கும் அமைப்பான காங்கிரஸ் செயற்குழு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டுவரும் அரசாங்கத்தின் நடவடிக்கை மற்றும் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விவாதிக்க டிசம்பர் 27 அன்று கூடுகிறது. பீகார் தேர்தல் தோல்விக்குப் பிறகு நடைபெறும் காங்கிரஸ் செயற்குழுவின் முதல் கூட்டம் இதுவாகும். 2026ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அசாம், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தல் வியூகமும் இதில் வகுக்கப்படும் என்று தெரிகிறது.

## வாக்கு திருட்டு பாஜவின் DNA-வில் உள்ளது

# மோடி, ஆர்எஸ்எஸ் அரசை அகற்றுவோம்!



### டெல்லி பேரணியில் ராகுல் காந்தி சபதம்

“வாக்கு திருட்டு பாஜவின் டிஎன்ஏவில் உள்ளது. நாங்கள் சத்தியத்தின் பக்கம் நிற்கிறோம். மோடி ஆர்எஸ்எஸ் அரசை அதிகாரத்திலிருந்து அகற்றுவோம்” என டெல்லி பேரணியில் ராகுல் காந்தி சபதம் செய்துள்ளார். வாக்கு திருட்டுக்கு எதிராக ‘வாக்குத் திருடர்களே, பதவியை விட்டு விலகுங்கள்’ என்ற பிரமாண்ட பேரணி காங்கிரஸ் கட்சி சார்பில் டெல்லி ராம் லீலா மைதானத்தில் நேற்று நடத்தப்பட்டது.

இதில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி மற்றும் பல்வேறு மூத்த தலைவர்கள் பலர் பங்கேற்றனர். பேரணியில் ராகுல் காந்தி பேசியதாவது: சமீபத்தில் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் அந்தமான் நிக்கோபாரில் பேசுகையில், “உலகம் உண்மையை அல்ல, அதிகாரத்தையே பார்க்கிறது.

யாரிடம் அதிகாரம் இருக்கிறதோ, அவர்களே மதிக்கப்படுகிறார்கள்” என்றார். எங்கள் சித்தாந்தம், எங்கள் நாட்டின் சித்தாந்தம் மற்றும் எங்கள் இந்து மதம் மற்றும் பிற மதங்கள் உண்மைதான் மிக முக்கியமானது என்று கூறுகின்றன. ஆனால் மோகன் பகவத் ‘உண்மைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை, அதிகாரம் மட்டுமே முக்கியம்’ என்கிறார். இந்த சண்டை உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலானது.

உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலான இந்த சண்டையில், தேர்தல் ஆணையம் பாஜ அரசுடன் இணைந்து செயல்படுகிறது. பீகார் தேர்தலின் போது, வாக்காளர்களுக்கு பாஜ ரூ.10,000 வழங்கியது. ஆனால் தேர்தல் ஆணையம் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், பிரேசில் பெண்கள் கூட அரியானா தேர்தலில் வாக்களித்தனர்.

பாஜவால் திருடப்பட்ட அரியானா மற்றும் பிற தேர்தல் குறித்து நாங்கள் கேட்ட எந்த கேள்விக்கும் தேர்தல் ஆணையம் பதிலளிக்கவில்லை. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்வீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் பாஜவுக்காகப் பணியாற்றுகிறார்கள். பிரதமர் மோடி, தேர்தல் ஆணையத்திற்கு பாதுகாப்பு அளிப்பதற்காக புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்.

இந்தச் சட்டம் உங்களை (தலைமை தேர்தல் ஆணையர்) பாதுகாப்பதற்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது. உங்களுக்கு தெளிவாகச் சொல்கிறோம். நாங்கள் இந்தச் சட்டத்தை மாற்றி, உங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம். பிரதமர் மோடியின் மோடியின் முகத்தைப் பாருங்கள்.

# வாக்குச்சீட்டில் நேர்மையுடன் தேர்தலை சந்திக்க தயாரா?

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பேசுகையில், ‘‘தேர்தல் ஆணையத்தின் உதவியின்றி பாஜவால் தேர்தலில் வெற்றி பெற முடியாது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்வீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷியை இந்த நாடு ஒருபோதும் மறக்காது. அவர்களைப் பாதுகாக்க எவ்வளவு முயற்சிகள் செய்யப்பட்டாலும், ஒரு நாள் அவர்கள் மக்களின் வாக்குரிமையைப் பறிக்க சதி செய்ததற்கு பதிலளிக்க வேண்டும்.

நான் சவால் விடுகிறேன். பாஜ ஒரு முறையாவது வாக்குச்சீட்டு முறையில் நேர்மையான தேர்தலில் போட்டியிட வேண்டும். அப்படி செய்தால் அவர்களால் ஒருபோதும் வெற்றி பெற முடியாது, இந்த உண்மை பாஜவுக்கும் தெரியும். வரலாற்றில் முதல் முறையாக, முழு எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணையத்தின் மீது நம்பிக்கை இல்லை என்றும், தேர்தல்கள் முறையாக நடத்தப்படவில்லை என்றும் கூறுகின்றன. அனைத்து நிறுவனங்களும் அரசாங்கத்திற்கு அடிபணிய வைக்கப்பட்டுள்ளன’’ என்றார்.




அவருடைய தன்னம்பிக்கை தளர்ந்துவிட்டது. அமித் ஷாவின் கை நாடாளுமன்றத்தில் நடுங்கியதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். அமித் ஷா அதிகாரம் இருக்கும் வரை மட்டுமே தைரியசாலி. அதிகாரம் போன அன்றே, அவருடைய தைரியமும் மறைந்து விடும்.

தங்களின் வாக்கு திருட்டு பிடிபட்டுவிட்டது என்பது அவர்களுக்கு தெரியும். வாக்கு திருடர்களே பதவியை விட்டு விலகுங்கள் என்ற முழக்கம் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு நேரம் ஆகலாம், ஆனால் உண்மை வெல்லும். மகாத்மா காந்தி சத்தியத்தின் பாதையைக் காட்டியுள்ளார், நாங்கள் அந்தப் பாதையில் பயணிப்போம்.

இந்த வாக்குத் திருட்டு என்பது வெறும் வாக்குகளைத் திருடுவது மட்டுமல்ல, இது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஒரு வாக்கு என்று கூறும் அம்பேத்கரின் அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதல். அவர்கள் வாக்குத் திருட்டு மூலம் தங்கள் அரசை நடத்துகிறார்கள். அவர்கள் சிறு தொழில்களை அழித்துவிட்டனர். தவறான ஜிஎஸ்டியை அமல்படுத்தினர். அவர்கள் வாக்கு திருட்டில் ஈடுபடாமல் இருந்திருந்தால், நீங்கள் அவர்களை 5 நிமிடங்களில் அதிகாரத்தில் இருந்து அகற்றியிருப்பீர்கள். இதுதான் உண்மை.

எங்கள் டிஎன்ஏவில் உண்மை இருக்கிறது. பாஜவின் டிஎன்ஏவில் வாக்கு திருட்டும், பொய்யும் இருக்கிறது. வெறுப்பால் அல்ல, வன்முறையால் அல்ல, சத்தியத்துடனும் அகிம்சையுடனும், நாங்கள் மோடியையும் அமித் ஷாவையும் தோற்கடிப்போம். மோடி ஆர்எஸ்எஸ் அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவோம். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

பின்னர் அவர் தனது எக்ஸ் பதிவில், “ திருட்டு என்பது பாஜவின் டிஎன்ஏவில் உள்ளது. பணத் திருட்டு, நிலத் திருட்டு, நிறுவனத் திருட்டு, உரிமைத் திருட்டு, வேலைவாய்ப்பு திருட்டு, மக்கள் ஆணைத் திருட்டு, அரசாங்கத் திருட்டு, தேர்தல் திருட்டு, வாக்குத் திருட்டு என மக்களிடமிருந்து அனைத்தையும் திருடுவதுதான் பாஜவின் அதிகாரத்திற்கான ஏணி” என கூறி உள்ளார்.

## பாஜவினர் துரோகிகள்

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில், ‘‘பாஜ ஆர்எஸ்எஸ் அமைப்பினர் அரசியலமைப்பை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்துத்துவா என்ற பெயரில் அவர்கள் ஏழைகளை மீண்டும் அடிமைப்படுத்த விரும்புகிறார்கள்.

மனுஸ்மிருதியின் சித்தாந்தம் நாட்டை அழித்து விடும், காங்கிரசின் சித்தாந்தத்தால் மட்டுமே நாட்டை காப்பாற்ற முடியும். அவர்கள் நேரு, காந்தி, அம்பேத்கருக்கு எதிராக பேசுகிறார்கள். படேலுக்கும் நேருக்கும் இடையே வேறுபாடுகளை விதைக்கிறார்கள். நாங்கள் அதை அனுமதிக்க மாட்டோம். பாஜவினர் துரோகிகள். இந்த துரோகிகளை நீங்கள் அகற்ற வேண்டும். உங்களை பாதுகாக்க விரும்பினால் துரோகிகளை அகற்றுங்கள்’’ என்றார்.




# இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்

இனிய தைத் திருநாள், தமிழர் திருநாள், இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்.
அன்பு உள்ளம் நிறைந்து திறந்து வாழ்த்தும் நல்வாழ்த்துக்கள்.
பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.
பொங்கல் பொங்கும் இல்லம் எங்கும் இன்பம் பொங்க,
“பொங்கலோ பொங்கல்” என்று பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்வோம்.
கரும்பு விளைந்தாச்சு;
எல்லோருக்கும் பொங்கல் போல் பொங்கும் இனிக்கும் மனச்சாட்சி.
பொங்கலுக்கு அரும்பு மலர்ந்து பூவாச்சி;
பெண்கள் கூந்தலுக்கு,
புது பானையில் ததும்பத் ததும்ப நல்ல தண்ணீர் வைத்து,
புதிய பச்சரிசி, புதிய வெல்லம்,
புதிய முந்திரி, திராட்சை, ஏலக்காய்,
மஞ்சள், குங்குமம், பொட்டு வைத்து,
பூச்சரங்களும், மஞ்சள் கொத்து, இஞ்சி கொத்து
பொங்கல் பானையில் அலங்கரித்து,
கலந்த எல்லா காய்கறிகளையும் சமையலாக்கி,
“பொங்கலோ பொங்கல்” என்று குலவையிட்டு,
சூரிய பகவானுக்கு தேங்காய், பழங்கள் வெற்றிலை பாக்கு எல்லாம் படைத்து,
சூரிய பகவானை வணங்கி நல்வாழ்த்து பெற்று,
உழைப்பதில் நன்மையும்,
உழவுத் தொழில் நலமும் பெற,
விளையும் பொருள் செழிக்கவும்,



# கனவுக்குள் ஓவியம்

என் கனவுக்குள் வரும் காதலை
கவிதையாக எழுதுகிறேன்

உன் கனவுக்குள் வரும் காதலை
என்னவாக நினைக்கிறாய்

என் நினைவாக என்னை உனக்குள்
ஓவியமாக வரைகிறாயா

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

கவிதை

# சுகமான சுகம் தானே



பனி காலத்தில் பூவின் ஆசை சுகமானது தானே
சூரியன் தாமதமாக வருவதால்
பூவின் இதழ்களில் தூங்கிய பனித்துளிகள்
கொஞ்சம் தாமதமாக தூக்கம் கலைந்து
மெல்ல மெல்ல பூவின் இதழ்களில் இருந்து பனித்துளிகள்
சோம்பல் கலைந்து பூவின் இதழ்களில் இருந்து
பனித்துளிகள் சுகமாக விடைபெறும்

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road, Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

*விவசாயம் செழித்து,*
*விளைநிலங்கள் எல்லாம் நல்ல விளைச்சலைத் தந்து,*
*இன்னும் மேலும் மேலும் தமிழர் நலம் உயர,*
*நம் வாழ்வும் உயர,*
*தரணி எங்கும் சூரிய ஒளிபோல்*
*அனைவரின் வாழ்வும் ஒளிர,*
*மலர் போல் மனித வாழ்வும் மணம் பெற,*
*வாழ்க! வாழ்க! வாழ்க!*
*என்று இனிய தைத் திருநாள், தமிழர் திருநாள்,*
*இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களைச் சொல்லி மனம் மகிழ்வோம்.*
*இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் நன்றியோடு சொல்லி மகிழ்வோம்.*

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar, Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: - 8681876155, 9444842105.

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்

பேருந்து இன்னும் வரவில்லையே என்று சிறிது நேரம் யோசித்தார்கள். பக்கிரியும் கண்வெளியில் துடித்துக் கொண்டிருந்தான். ராமசாமிக்கும் கால்கையில் அடிபட்டதால் கை தூக்க முடியாமல் வலியில் துடித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் ஒண்ணுமே புரியவில்லை என்றார்கள். அதில் ஒருவர் சொன்னார்,

“ஏம்பா, மழை எப்ப வரும்? நம்ம எப்ப பயிர் விதைக்கிறோம்? இதெல்லாம் சரிப்பட்டு வருமா? அப்பா, மழையை நம்பி இருக்கிற மாதிரிதானே இருக்கிறீங்க. விதைக்கிற காலம் கடந்து போகும் பா. அப்புறம் பயிர் விளைந்து, அறுவடை காலமும் தள்ளிப் போகும்.

அதனால, இருக்கிற நேரத்தையும் வருகிற காலத்தையும் நினைத்து, நாம் விதைத்த பயிரையும் வளர்ந்து விளைந்து கொண்டிருக்கும் பயிரையும் காப்பாத்தணும். அது போலதான் இவர்களையும் இந்தக் கஷ்டத்திலிருந்து சீக்கிரமா நிவர்த்தி ஆகணும் என்று கடவுள் மன்னார்குடி ராஜகோபால் பெருமாளை வேண்டுவோம்.




மழையை நம்பி பயிரை வாட விடக்கூடாது. மழை அது வரும்போது தான் வரும். அதனால் பக்கத்து நிலத்துக்காரங்க கிட்ட கிணறு இருந்தாலும் பரவாயில்லை, நிலத்தில் இருக்கிற போர் இருந்தாலும் பரவாயில்லை, அதிலிருந்து தண்ணீர் வாங்கி பாச்சணும்.

அது போலதான் பஸ் வரும் வரும் என்று



காத்து இருப்பதை விட, நம்ம ஊர்ல யாரிடம் வண்டி இருக்குது என்பதை கேட்டு, முயற்சி பண்ணி வாங்கி, சீக்கிரமா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போகணும். அப்பத்தான் இவர்களை வலியிலிருந்து காப்பாத்த முடியும்."



அதைக் கேட்ட ஒருவர்,

"ஐயா, என்ன சொல்றீங்க? சைக்கிள்ல வச்சு ரெண்டு பேரையும் ஆஸ்பத்திரிக்கு தள்ளிட்டு போகலாம்னு சொல்றீங்களா?" என்று தலையை சொறிஞ்சார்.

அதற்கு இன்னொருவர் எரிச்சலோடு சொன்னார்,

"சொரியாதப்பா, தலையை சொரியிற தலைய கொஞ்சம் பார்த்து சொறி. காத்து அடிக்கிற நேரமா பார்த்து சொறிஞ்சிடாத. இருக்கிற பத்து மயிரும் மாணிக்கமும் சொரிகிறதுல பறந்து போயிடும். ரொம்ப சொரியாத, சரியா? யோசனை சொல்றாங்களா? யோசனை! தலைய சொறிஞ் சுகிட்டு இன்னும் உனக்கு தள்ளிக்கட்டு போற புத்தி போகல பாத்தியா?"

அப்போது ரோட்டுப் பக்கமாக இருந்து ஒருவர்,

"ஏய்! பஸ் ஒன்னு வருது, வாங்க கை போட்டு நிறுத்தலாம்!" என்றார்.

"டேய்! பஸ் வருதாம், வாங்க வாங்க, கை போடலாம்!" என்று இந்தப் பக்கமாக அடிபட்டு காயம் பட்டவர்களிடம் இருக்கிறவர்கள் கை போட்டார்கள்.

பஸ் வந்து ஓரம் கட்டி நின்றது. பஸ் நின்றதும், "வாங்க வாங்க" என்று பக்கிரியும் ராமசாமியையும் மெதுவாக கைத்தாங்கலாக கூட்டிக்கிட்டு வாங்க என்று அருகில் இருந்தவர்கள் அழைத்தார்கள்.

பக்கிரியும் ராமசாமியும் பஸ் ஏறுவதற்காக, வலியையும் பொறுப்படுத்தாமல், வலியைத் தாங்கிக் கொண்டு கைத்தாங்கலாக பஸ் அருகில் வந்தார்கள். ஆனால் அந்த பஸ்சில் கூட்டம் அதிகமாக இருப்பதை பார்த்தார்கள். ஒரு கால் வைக்கக் கூட இடமில்லாமல், பஸ் முழுவதும் பயணிகள் நிறைந்து இருந்தார்கள்.

இதைக் கண்ட பஸ் கண்டக்டர்,

"ஐயா, எங்க போனும்? என்ன ஆச்சு இவர்களுக்கு?" என்று விசாரித்தார்.

அதற்கு சிலர் சொன்னார்கள்,

"இவர்கள் ரெண்டு பேரும் கீழே விழுந்து அடிபட்டு காயம் அடைந்திருக்காங்க. அதனால் ஜெயங்கொண்டம் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போகணும். கொஞ்சம் இவங்களையும் இந்த பஸ்ல கூட்டிட்டு போய் அங்க இறக்கி விட்டுருங்க."

அதற்கு கண்டக்டர் சொன்னார்,

"ஐயா, இவர்களை இந்த பஸ்ஸில் கூட்டிட்டு போறது கொஞ்சம் சிரமம். இவங்க அடிபட்ட வலியால ரொம்ப கஷ்டப்பட்றாங்க. இவ்வளவு கூட்டத்துல உட்கார வைக்க இடமே இல்லை, நிற்க கூட இடமில்லை. அதனால் இதுக்குப் பின்னாடி வேற பஸ் வந்தா அதுல நீங்க போகலாமே."

என்று சொல்லிவிட்டு பஸ் அங்கிருந்து கிளம்பியது. இவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் அங்கு இருந்த எல்லோரின் மனமும் வருந்தியது. "சீக்கிரமா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போகலாம்னு பார்த்தா, இந்த பஸ் காரன் இப்படிச் சொல்லிட்டு போயிட்டானே" என்று வருத்தப்பட்டார்கள்.

*(தொடரும்)*


**ராமகிருஷ்ணன்**

26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.




# சான்றோர் குரல்

**சந்தா விபரம்:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

**விளம்பர கட்டணம்**

| | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

Contact No: 99622 35002

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL
SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE

# திண்டுக்கல்லில் கோபால் நாயக்கர் தூக்கிலிடப்பட்ட இடத்தில் வெண்கல சிலை நிறுவ வேண்டும்

## தெலுங்கர் சமூகம் சார்பில் தமிழக அரசுக்கு கோரிக்கை



திண்டுக்கல்லில் கோபால் நாயக்கர் தூக்கிலிடப்பட்ட இடத்தில் வெண்கல சிலை நிறுவ வேண்டும். மற்றும் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு கோபால் நாயக்கர் பெயரிட வேண்டும் என தெலுங்கர் சமூகம் சார்பில் தமிழக அரசுக்கு கோரிக்கை

பிப்ரவரி 22ஆம் தேதி மாநில அளவில் தெலுங்கர் சமூகம் சார்பில் மாநாடு நடைபெற உள்ளது இதற்கான ஆலோசனை கூட்டம் திண்டுக்கல் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. 38 சதவீதம் உள்ள தெலுங்கர் சமூகம் அரசுக்கு முன்வைக்கும் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். திண்டுக்கல் கோபாலசமுத்திர கரையில் தூக்கில் இடப்பட்ட இடத்தில் கோபால் நாயக்கர் வெண்கல சிலை நிறுவ வேண்டும்.



திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கோபால் நாயக்கர் பெயரை வைக்க வேண்டும் உள்ளிட்ட 10 கோரிக்கைகள் நிறைவேற்றபட்டன.

மேலும் இந்த மாவட்ட கூட்டத்தில் பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள மாநில மாநாடு எவ்வாறு சிறப்பாக நடத்தலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டது

இதில் தெலுங்கர் சமூகத்தை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# அருள்மிகு திரு முனியசாமி கோயில் கொடை திருவிழா



ஆன்மீகம்

மஞ்சள்விளையில் ஊர் மக்களை காத்து அருளும் மஞ்சள்விளை கிராமத்து காவல் தெய்வமான எங்கள் திருமுனிய சாமியை வணங்கி வணக்கம் ஐயா வணக்கம் என்று வணங்கி உன்னுடைய ஆலயத்தில் நடக்கும் உனக்கான கொடை திருவிழாவை சிறப்பாக நடத்த எங்களுக்கு ஆணையிட்டு அருள் புரிவாய் ஐயா திரு முனியசாமி ஐயா தீர்த்தக்கரையில் இருந்து கடலில் புனித நீர் எடுத்து ஆலயம் எங்கும் தெளித்து கும்ப கலையம் வைத்து தென்னம் பாலையும் மா இலை வண்ண வண்ண தோரணங்களும் வைத்து பூக்களும் மணக்க மணக்க வைத்து வென் பொங்கலும் வைத்து சர்க்கரை பொங்கலும் வைத்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு அர்ச்சனைகளும் நேந்து விட்ட கோழி கறி சமையலும் கருவாட்டு குழம்பும் காய்கறி சமையலும் பூசாரி பூஜை பூஜை வைப்பதையும் நீ ஏத்துக்கணும் ஐயா திரு முனிய சாமியே சாமக்குடையில் நீ வானம் பூமி போல் காட்சி தருவதும் நீதானய்யா சாமி ஆடி உருவில் எங்களுக்கும் மக்களுக்கும் நல்வாழ்வு வாழ அருள்வாக்கு தருவாய் ஐயா பூக்கள் எல்லாம் உன் மார்பில் மாலையாகும்




உன் மார்பிலே தங்க குவளையில் மேனியில் மின்னும் அழகே அழகையா அழகையா அழகு அம்மாவின் துணைகொண்டு ஊர் மக்களுக்கு உதவிகள் செய்வாய் ஐயா திரு முனிய சாமியே ஐயா உனக்கு வில் பாட்டு இசையும் புராணங்கள் கதையும்

சொல்லி சொல்லி விடிய விடிய நடக்கும் நிகழ்ச்சிகளும் எண்ணில் அடங்காதவை தானையா அது உனக்காக தானையா எங்கள் ஊர் காவல் தெய்வமான முனியசாமி ஐயா எங்களுக்கெல்லாம் பொன்னான மனசும் நல்ல குணமும் பொதுவான வாழும் வாழ்க்கையில் நல்ல சிந்தனையும் செய்யும் தொழில் சிறக்கவும் சிறப்பான வாழ்க்கை அனைவருக்கும் அமைய அருள் புரிவாய் ஐயா எங்கள் திரு முனிய சாமி ஐயா தைத்திருநாளில் கோடை திரு விழா காணும் நல் நாளில் திரு முனிய சாமியே எழுந்து அருள் புரிவாய் ஐயா எங்கள் காவல் தெய்வமான திரு முனிய சாமியை மஞ்சள்விளை ஊர் மக்களையும் அவர்கள் உறவினர்களையும் அருகில் உள்ள கிராமத்தில் உள்ள ஊர் மக்களையும் உன்னை வணங்குவோர் அனைவரையும் காத்து அருள வேணும் ஐயா திரு முனியசாமி ஐயா நீ அமர்ந்து அருள் புரியும் ஆலமரமோ எத்தனையோ 100 ஆண்டுகள் ஆனது தானையா முனிய சாமியே திரு முனிய சாமியே உன்னை வணங்கும் மக்களுக்கும் நல்ல ஆரோக்கியமும் நீண்ட ஆயுலையும் தந்து மகிழ வேணுமய்யா திரு முனியசாமி ஐயா நாங்கள் ஏதேனும் தெரிந்தும் தெரியாமலும் சிறு பிழைதனை செய்திருந்தாலும் மனம் பொருத்து மன்னித்து அருள்வாய் ஐயா எங்கள் திரு முனியசாமி ஐயா முனியசாமி கோயில் கொடை திருவிழாவை முன்னின்று நடத்தும் பெரியோர்களுக்கும் இளைஞர்களுக்கும் பக்தர்களுக்கும் பொருள் உதவி பண உதவி வரி கொடுத்து திருவிழா நடத்திக் கொண்டிருக்கும் ஊர் மக்கள் அனைவருக்கும் முனுசாமி அருளால் நாம் எல்லோருக்கும் மன மகிழ்ச்சியும் எல்லா நலமும் வளமும் கிடைக்க வேண்டும் என்று ஐயா திரு முனிய சாமியை மண்டிட்டு விழுந்து வணங்கி வேண்டி கேட்டுகிறோம் ஐயா முனிய சாமியே எல்லா நலமும் தந்து எங்களை மகிழ செய்வாயே ஐயா திரு முனியசாமியை வணங்குவோம்.

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

# திண்டுக்கல்லில் ஸ்மார்ட் இந்தியா ஹாக்கத்தான் 2025




வள மேலாண்மை, நிர்வாகம் மற்றும் பொதுச் சேவை மேம்பாடு ஆகியவற்றில் புதுமையான தொழில்நுட்ப தீர்வுகளை மென்பொருள் மூலம் காண்பதற்கான இறுதி சுற்று திண்டுக்கல்லில் ஸ்மார்ட் இந்தியா ஹாக்கத்தான் 2025 தொடங்கியது

கல்வி அமைச்சகத்தின் இனோவேஷன் செல் மற்றும் தொழிற்கல்வி கவுன்சில் (AICTE) இணைந்து நடத்தும் ஸ்மார்ட் இந்தியா ஹாக்கத்தான் (SIH) 2025 மென்பொருள் பிரிவுக்கு ஒருங்கினணப்பு மையமாக (நோடல் சென்டர்) திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தலைமை விருந்தினர், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் பஞ் சநாதம் , சிறப்பு விருந்தினர் பெங்களூரு சர்வதேச விமான நிலையம் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரவிகுமார் , கல்லூரி முதல்வர் முனைவர் வாசுதேவன் மற்றும் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் புஷ்பலட்சுமி ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வு 09.12.2025 வரை தொடர்ந்து நடைபெறுகிறது. கல்வி மற்றும் தொழில் துறை நிபுணர்களைக் கொண்ட மதிப்பீட்டு குழு, தனித்தன்மை, பயன்பாட்டு உகப்பு மற்றும் தாக்கம் போன்ற தரங்களுக்கு ஏற்ப திட்டங்களை மதிப்பாய்வு செய்யும்.

வள மேலாண்மை, நிர்வாகம் மற்றும் பொதுச் சேவை மேம்பாடு ஆகியவற்றில் புதுமையான தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்குவதே இந்நிகழ்வின் நோக்கமாகும். சுரங்கத் துறை அமைச்சகம் மற்றும் 8 மாநிலங்களைச் சேர்ந்த 20 அணிகள் மற்றும் 139 பங்கேற்பாளர்கள் இந்த இருநாள் ஹாக்கத்தானில் கலந்து கொள்கின்றனர்.

இவர்கள் முன்மாதிரிகள் மற்றும் தீர்வு முன்மொழிவுகளை வழங்க உள்ளனர்.

பிஎஸ்என்ஏ கல்லூரி பங்கேற்பாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கான பரிசோதனை கூடங்கள், அதிவேக இணைய வசதி, வழிகாட்டி உதவி மற்றும் 24 மணி நேர ஒருங்கிணைப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளையும் வழங்குகிறது. இந்நிகழ்வு இளம் தொழில்நுட்ப வல்லுநர்களின் குழுப் பன்மையை, படைப்பாற்றலை மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தும் வகையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

# பிஎஸ்என்ஏ பொறியியல் கல்லூரியில் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான்2025 பிரம்மாண்ட இறுதிச்சுற்று நிறைவு விழா.




திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மத்திய கல்வி அமைச்சகத்தின் இன்னோவேஷன் செல் மற்றும் தொழில் கவுன்சில் இணைந்து நடத்தும் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான்2025 இன் பிரமாண்ட இறுதிச்சுற்று 09.12.2025 செவ்வாய் கிழமை அன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியானது முனைவர் ஏ. வின்செண்ட் ஆண்டனி குமார் வரவேற்புரையுடன் தொடங்கியது. முதல்வர் டி.வாசுதேவன் விழாவில் சிறப்புரையாற்றினார். வெங்கடேசன் பாலகிருஷ்ணன் ஷிறிணிசி வீஸீஸீஷீஸ்ணீமீ வீஷீஸீ லிலிறின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் பிஎஸ்என்ஏ கல்லூரியின் முன்னாள் மாணவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மேலும் அவர் மாணவர்கள் தெளிவுடனும் அர்ப்பணிப்புடனும் முதுமைகளை பின் தொடர வேண்டும் என வலியுறுத்தினார். இந்திய அரசின் நோடல் மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட நிதின்குமார் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் மற்றும் விக்சித் பாரத் @2047 என்ற நாட்டின் தொலைநோக்கு பார்வையை முன்னேற்றுவதில் முக்கிய பங்காற்றுவதாகவும் இந்தியா ஒரு வளர்ந்த புத்தாக்கம் சார்ந்த உலகளாவிய தலைவராக மாறுவதற்கான நோக்கத்தை வலியுறுத்துவதாகவும் எடுத்துரைத்தார்.

சுரங்க அமைச்சகத்தின் விஞ்ஞானி . சாய் அலேகியா கௌரவிக்கப்பட்டார். ஹேக்கத்தானின் போது சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் குறித்து மதிப்பீட்டாளர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற அணிகள்:

1.AXFORTUNE செயின்ட் ஜோசப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை.

2.GLITCH CODERS (TGC) செயின்ட் ஜோசப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை.

3.Hackmonks06 தத்தா மேகே பொறியியல் கல்லூரி, மும்பை.

4.INNOHACK இந்திய தகவல் தொழில்நுட்பக் கழகம், புனே.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர் புஷ்பலட்சுமியின் நன்றி .

## 3 ஏடிஜிபி, 7 ஐஜி, 3 டிஐஜி, 15 எஸ்பி, 2 கூடுதல் எஸ்பிக்களுக்கு பதவி உயர்வு

# தமிழகம் முழுவதும் 70 ஐபிஎஸ் அதிகாரிகள் பணி மாறுதல்

- சட்டம் ஒழுங்கு ஏடிஜிபியாக மகேஷ்வர் தயாள், தாம்பரம் கமிஷனராக அமல்ராஜ், ஆவடி கமிஷனராக பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம்
- முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



தமிழகத்தில் 3 ஏடிஜிபிக்கள், 7 ஐஜிக்கள், 3 டிஐஜிக்கள், 15 எஸ்பிக்கள், 2 கூடுதல் எஸ்பிக்கள் என மொத்தம் 30 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர்களோடு சேர்த்து மொத்தம் 70 பேருக்கு புதிய பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபியாக மகேஷ்வர் தயாளும், தாம்பரம் கமிஷனராக அமல்ராஜும், ஆவடி கமிஷனராக பிரேம் ஆனந்த் சின்ஹாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்ற பிறகு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 30ம் தேதி அல்லது 31ம் தேதியன்று பதவி உயர்வு வழங்கி உத்தரவிட்டு வருகிறார். அதேபோல 2026ம் ஆண்டுக்கான ஐபிஎஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு மற்றும் பணி மாறுதலுக்கான பட்டியல் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் அடிப்படையில் நேற்று இரவு வெளியிடப்பட்டது.

இது குறித்து உள்துறைச் செயலாளர் தீரஜ்குமர் வெளியிட்டுள்ள அரசாணை: தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவ ஆசிர்வாதம், டிஜிபியாக பதவி உயர்வு பெற்று ஆயுதப்படை டிஜிபியாகவும், சைபர் கிரைம் கூடுதல் டிஜிபியாக இருந்த சந்தீப் மிட்டல் பதவி உயர்வு பெற்று, அதே பிரிவில் டிஜிபியாகவும், பொருளாதார குற்றப்பிரிவு கூடுதல் டிஜிபியாக இருந்த பால நாகதேவி பதவி உயர்வு பெற்று, அதே பிரிவில் டிஜிபியாகவும் மற்றும் அவருக்கு கூடுதல் பொறுப்பாக சிவில் சப்ளை சிஐடியும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, சிபிசிஐடி ஐஜியாக இருந்த அன்பு பதவி உயர்வு பெற்று சிபிசிஐடி ஏடிஜிபியாகவும், தெற்கு மண்டல ஐஜியாக இருந்த பிரேம் ஆனந்த் சின்ஹா, பதவி உயர்வு பெற்று ஆவடி போலீஸ் கமிஷனராகவும், மும்பை, சிபிஐயில் ஐஜியாக உள்ள

தீபக் எம்.தோமர் கூடுதல் டிஜிபியாக பதவி உயர்வு பெற்று அதே பிரிவிலும், மேற்கு மண்டல ஐஜியாக இருந்த செந்தில்குமார் பதவி உயர்வு பெற்று, டிஜிபி அலுவலக தலைமையிட கூடுதல் டிஜிபியாகவும், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐஜியாக இருந்த அனிசா உசைன், பதவி உயர்வு பெற்று, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு கூடுதல் டிஜிபியாகவும், காவல்துறை நவீனமயமாக்கல் ஐஜியாக இருந்த நஜ்மல் ஹோடா பதவி உயர்வு பெற்று, கமாண்டோ படை ஏடிஜிபியாகவும், தலைமையிட ஐஜியாக இருந்த மகேந்திர குமார் ரத்தோடு, போலீஸ் நலன் ஏடிஜிபியாகவும், ஆவடி போலீஸ் கமிஷனராக இருந்த ஏடிஜிபி சங்கர், சிறைத்துறை ஏடிஜிபியாகவும், போதைப்பொருள் அமலாகப்பிரிவு சிஐடி ஏடிஜிபியாக இருந்த அமல்ராஜ், தாம்பரம் போலீஸ் கமிஷனராகவும், சிறைத்துறை ஏடிஜிபியாக இருந்த மகேஷ்வர் தயாள், தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபியாகவும், தாம்பரம் போலீஸ் கமிஷனராக இருந்த அபின்தினேஷ் முடக், போதைப்பொருள் மற்றும் அமலாகப்பிரிவு சிஐடி ஏடிஜிபியாகவும், கமாண்டோ படை ஏடிஜிபியாக இருந்த தினகரன், தமிழ்நாடு போலீஸ் அகாடமி ஏடிஜிபியாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.





ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து துறையில் டிஐஜியாக உள்ள ரம்யா பாரதி, பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் ஐஜியாகவும், மத்திய தொழில் பாதுகாப்பு படை டிஐஜி பொன்னி, அதே பிரிவில் ஐஜியாகவும், வட சென்னை மாநகர போக்குவரத்து இணை கமிஷனர் சோனல் சந்திரா, குற்ற ஆவணக்காப்பக ஐஜியாகவும், ஒன்றிய அரசில் உளவுத்துறை டிஐஜியாக உள்ள ஜார்ஜி ஜார்ஜ், அதே பிரிவில் ஐஜியாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மேலும், சிபிஐ எஸ்பியாக(குஜராத்) இருந்த கலைச்செல்வன், அதே பிரிவிலும் டிஐஜியாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை குடியுரிமைப் பிரிவு எஸ்பி அருண் சக்திக்குமார், திருவனந்தபுரம் குடியுரிமைப் பிரிவு எஸ்பி அரவிந்த் மேனன் ஆகியோர் டிஐஜியாக பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் பணியாற்றுகின்றனர். ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு உளவுத்துறை எஸ்பி செஷாங் சாய், பதவி உயர்வு பெற்று காஞ்சிபுரம் டிஐஜியாகவும், சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு பிரிவு எஸ்பிதேஸ்முக் சேகர் சஞ்சய், பதவி உயர்வு பெற்று ராமநாதபுரம் டிஐஜியாகவும், ஒன்றிய அரசுப் பணியில் உள்ள தீபா கனிங்கர் டிஐஜியாக பதவி உயர்வு பெற்று அதே பிரிவிலும், ராஜஸ்தானில் அயல்பணியாக சென்றுள்ள ஓம் பிரகாஷ் மீனா, டிஐஜியாக பதவி உயர்வு பெற்று அதே பிரிவிலும், ஆவடி பட்டாலியன் எஸ்பியாக உள்ள மணிவண்ணன், டிஐஜியாக பதவி உயர்வு பெற்று, நெல்லை நகர போலீஸ் கமிஷனராகவும், தீவிரவாத தடுப்புப் பிரிவு எஸ்பி அருளரசு, டிஐஜியாக பதவி உயர்வு பெற்று விழுப்புரம் டிஐஜியாகவும், ஆவடி நிர்வாகம் மற்றும் தலைமையிட துணை கமிஷனர் மகேஸ்வரன், சென்னை தலைமையிட இணை கமிஷனராகவும், விழுப்புரம் எஸ்பி சரவணன், திருநெல்வேலி டிஐஜியாகவும், லஞ்ச ஒழிப்புத்துறை எஸ்பி சாமிநாதன், திண்டுக்கல் டிஐஜியாகவும், சென்னை மனித உரிமை ஆணைய எஸ்பி ஜெயலட்சுமி, தாம்பரம் இணை கமிஷனராகவும், சிலை தடுப்புப் பிரிவு எஸ்பி சிவக்குமார், ஆவடி இணை கமிஷனராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

ராமநாதபுரம் டிஐஜி மூர்த்தி, சென்னை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுக்கும், காஞ்சிபுரம் டிஐஜி தேவராணி, சென்னை லஞ்ச ஒழிப்புத்துறைக்கும், நெல்லை கமிஷனர் சந்தோஷ் ஹதிமணி, சேலம் சரக டிஐஜியாகவும், அமலாக்கப்பிரிவு ஐஜி கபில்குமார் சரத்கர், தாம்பரம் தலைமையிடம், போக்குவரத்து கூடுதல் கமிஷனராகவும், தென் சென்னை சட்டம் ஒழுங்கு கூடுதல் கமிஷனர் கண்ணன், கோவை நகர கமிஷனராகவும், போலீஸ் அகாடமி ஐஜியாக இருந்த தேன்மொழி, போலீஸ் விரிவாக்கப் பிரிவுக்கும், மத்திய மண்டல ஐஜி நிர்மல்குமார் ஜோஷி, சென்னை நகர தலைமையிட கூடுதல் கமிஷனராகவும், நிர்வாகப் பிரிவு ஐஜி பாலகிருஷ்ணன், மத்திய மண்டல ஐஜியாகவும், தாம்பரம் கூடுதல் கமிஷனர்

மகேஸ்வரி, டிஜிபி அலுவலக நிர்வாகப் பிரிவு ஐஜியாகவும், சென்னை நிர்வாகப் பிரிவு கூடுதல் கமிஷனர் விஜயேந்திர பிதாரி, தென் மண்டல ஐஜியாகவும், போலீஸ் விரிவாக்கப் பிரிவு ஐஜி நரேந்திரன் நாயர், தென் சென்னை சட்டம் ஒழுங்கு கூடுதல் கமிஷனராகவும், கோவை கமிஷனர் சரவண சுந்தரம், மேற்கு மண்டல ஐஜியாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பெரம்பலூர் எஸ்பி ஆதர்ஸ் பச்சோரி, சென்னை சைபர் கிரைம் எஸ்பியாகவும், செங்கல்பட்டு எஸ்பி சாய் பிரனீத், விழுப்புரம் எஸ்பியாகவும், நாகப்பட்டினம் எஸ்பி செல்வக்குமார், வடக்கு மண்டல மதுவிலக்கு அமலாக்கத்துறை எஸ்பியாகவும், தாம்பரம் தலைமையிட துணை கமிஷனர் செந்தில்குமார், ஆவடி மத்தியக் குற்றப்பிரிவு துணை கமிஷனராகவும், பெண்களுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு எஸ்பி உமையாள், போலீஸ் அகாடமி எஸ்பியாகவும், அந்தப் பதவியில் இருந்த டாக்டர் டி.செந்தில்குமார், திருச்சி துணை கமிஷனராகவும், திருநெல்வேலி சட்டம் ஒழுங்கு துணை கமிஷனர் பிரசன்னகுமார், திருநெல்வேலி எஸ்பியாகவும், திருச்சி வடக்கு துணை கமிஷனர் சிபின், செங்கல்பட்டு எஸ்பியாகவும், போலீஸ் நலன் பிரிவு எஸ்பி பாலகிருஷ்ணன், நாகப்பட்டினம் எஸ்பியாகவும், மதுரை மதுவிலக்கு அமலாக்கத்துறை எஸ்பி சந்திர சேகரன், சிலை தடுப்புப் பிரிவு எஸ்பியாகவும், மதுரை நகர துணை கமிஷனர் அனிதா, பெரம்பலூர் எஸ்பியாகவும், கீழ்பாக்கம் துணை கமிஷனர் ஜெரினா பேகம், காவலர் நலன் பிரிவு எஸ்பியாகவும், சென்னை மத்தியக் குற்றப்பிரிவு துணை கமிஷனர் கீதா, கீழ்பாக்கம் துணை கமிஷனராகவும், கோவை சிவில் சப்ளை சிஐடி எஸ்பி பாலாஜி சரவணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு பிரிவு எஸ்பியாகவும், தென்காசி எஸ்பி அரவிந்த், கள்ளக்குறிச்சி எஸ்பியாகவும், அங்கு எஸ்பியாக இருந்த மாதவன், தென்காசி எஸ்பியாகவும், திருநெல்வேலி எஸ்பி சிலம்பரசன், தூத்துக்குடி எஸ்பியாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல, தூத்துக்குடி நகர ஏஎஸ்பியாக இருந்த மதன், எஸ்பியாக பதவி உயர்வு பெற்று திருநெல்வேலி நகர துணை கமிஷனராகவும், அருப்புக்கோட்டை ஏஎஸ்பியாக இருந்து மதிவாணன், எஸ்பியாக பதவி உயர்வு பெற்று மதுரை வடக்கு துணை கமிஷனராகவும், தமிழ்நாடு சிறப்பு கமாண்டோ பிரிவு 14வது பட்டாலியன் (பழநி) எஸ்பியாக இருந்த பாண்டியராஜன், தமிழ்நாடு சிறப்பு கமாண்டோ பிரிவு 24வது பட்டாலியனுக்கும் (ஆவடி), சென்னை காவலர் பயிற்சி பள்ளி எஸ்.பியாக இருந்த மகேஸ்வரி, தமிழ்நாடு காமண்டோ பிரிவு எஸ்.பியாகவும், சென்னை அடையார் துணை கமிஷனராக இருந்த பொன் கார்த்திக் குமார், பள்ளிக்கரணை துணை கமிஷனராகவும், பள்ளிக்கரணை துணை கமிஷனராக இருந்த கார்த்திகேயன், அடையாறு துணை கமிஷனராகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் 3 ஏடிஜிபிக்கள், 7 ஐஜிக்கள், 3 டிஐஜிக்கள், 15 எஸ்பிக்கள், 2 கூடுதல் எஸ்பிக்கள் என மொத்தம் 30 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர்களோடு சேர்த்து மொத்தம் 70 பேருக்கு புதிய பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## 9 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம்

தலைமை செயலாளர் முருகானந்தம் வெளியிட்ட உத்தரவு: கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் சத்யபிரத சாகு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளராகவும், நில நிர்வாகம் ஆணையர் பழனிசாமி, கூட்டுறவுத்துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளராகவும், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் கஜலட்சுமி, நில நிர்வாகம் ஆணையராகவும், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கிரண் குராலா, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும், அறிவியல் நகரம் துணைத் தலைவர் தேவ் ராஜ் தேவ், தமிழ்நாடு உப்பு நிறுவன முதன்மை செயலாளராகவும், வரலாற்று ஆராய்ச்சி, ஆவணக் காப்பக ஆணையர் ஹர் சஹாய் மீனா, அறிவியல் நகர துணைத் தலைவராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், நீர்வளத்துறை சிறப்பு செயலாளர் மலர்விழி, வரலாற்று ஆராய்ச்சி மற்றும் ஆவணக்காப்பக ஆணையராகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கோபால சுந்தர ராஜ், அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சித்துறைத் தலைவர், இயக்குநராகவும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு துணைச் செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளராகவும் என பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளம்:

# 2027ம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும்



### இஸ்ரோ தலைவர் நாராயணன் !

“இந்தியாவில் ஸ்ரீஹரிகோட்டாவிற்கு அடுத்தபடியாக குலசேகரன்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் இரண்டாவது ராக்கெட் ஏவுதளத்திலிருந்து வரும் 2027ம் ஆண்டு முதல் ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்படும்” என, இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு இஸ்ரோ தலைவர் நாராயணன் வருகை புரிந்தார். அங்குள்ள அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “ ககன்யான் திட்டம் என்பது நாம் தயாரிக்கும் ராக்கெட் மூலம் இந்திய விண்வெளி வீரர்களை விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பி, அவர்களை பத்திரமாக திரும்பக் கொண்டு வரும் திட்டம் ஆகும். இந்த திட்டத்திற்காக ராக்கெட் தயாரிப்பு பணி முழுவீச்சில் நடந்து வருகிறது.

விண்வெளியில் வீரர்களுக்கு தேவையான வெப்பநிலை, அழுத்தம், கார்பன்டைஆக்சைடு, ஆக்சிஜன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அமைப்பின் மேம்பாட்டுப் பணிகளும் சிறப்பாக நடந்து வருகின்றன. ராக்கெட் ஏவுதலின் போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், விண்வெளி வீரர்களின் உயிரை பாதுகாக்கும் வகையில், அவர்களை பத்திரமாக வெளியேற்றும் அமைப்பின் ”குரூப் எஸ்கேப் சிஸ்டம்’ திட்டப்பணியும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இந்த திட்டத்திற்காக கிட்டத்தட்ட 8,000 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. மனிதர்களுடன் செல்லும் ககன்யான் விண்கலத்தை 2027ம் ஆண்டில் விண்ணுக்கு அனுப்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக ஆட்கள் இல்லாத 3 பரிசோதனை ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்பட உள்ளன. பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்புக்கு இணங்க, 2035ம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்திய விண்வெளி நிலையம் அமைக்கப்படும். இந்த விண்வெளி நிலையம் மொத்தம் 5 தொகுதிகளாக உருவாக்கப்படும். முதல் தொகுதி அமைக்க 2028ம் ஆண்டில் ராக்கெட் விண்ணுக்கு அனுப்பப்படும். இதற்கான ஒப்புதல் கிடைத்துள்ள நிலையில் இந்த பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த 2023ம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டிய குலசேகரபட்டினம் ஏவுதளத்தின் அனைத்துப் பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இது ஸ்ரீஹரிகோட்டாவிற்கு அடுத்தபடியாக, இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளமாக அமையும். இந்த திட்டம் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா என்று பேசுவதற்கு பதிலாக, இந்திய நாட்டிற்கான ஒரு முக்கியமான மையமாக பார்க்கப்பட வேண்டும். 2027ம் ஆண்டு தொடக்கத்தில் குலசேகரபட்டினம் ராக்கெட் ஏவுதளம் செயல்பட தொடங்கும். அங்கிருந்து ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்படும். சந்திரயான்3 நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது போல, சந்திரயான் 4 திட்டமானது நிலவில் தரையிறங்கி, அங்கிருந்து நிலவின் மாதிரிகளை சேகரித்து திரும்ப பூமிக்குக் கொண்டு வரும் இலக்குடன் செயல்படும். இதற்கான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.” என்றார்.

# தமிழகத்தில்

# 97 லட்சம் பேர் நீக்கம்

## மாவட்ட வாரியாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு



வரைவு வாக்காளர் பட்டியல் விவரங்களை சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார். உடன் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி ஸ்ரீதர்.

தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. கடந்த அக். 27ம் தேதி நிலவரப்படி, 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில், தற்போது 5.44 கோடி வாக்காளர்கள் இருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணிகள் கடந்த அக். 27ம் தேதி இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது. நவ.4ம் தேதி எஸ்ஐஆர் பணிகள் தொடங்கின. இப்பணியில் 68 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பிஎல்ஓ) ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் வீடு வீடாக சென்று, எஸ்ஐஆர் படிவங்களை வழங்கி, ஆய்வு செய்து, பூர்த்தி செய்த படிவங்களை கணினியில் பதிவேற்றினர். இப்பணிகள் கடந்த டிச.14ம் தேதி நிறைவடைந்தன.

ஏற்கெனவே அறிவித்தபடி, தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல்களை, சம்பந்தப்பட்ட தொகுதிகள் இடம்பெற்றுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று வெளியிட்டனர். இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று கூறியதாவது:

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில், கணக்கெடுப்பு பணி நிறைவுற்று வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், சிறப்பு முகாம்களிலும் மக்கள் பார்வைக்காக இந்த பட்டியல் வைக்கப்படும். www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும். இதில் மக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர் விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம்.

***ஜன.18 வரை விண்ணப்பம்:*** இந்த பட்டியலின் அடிப்படையில், தகுதியுள்ள வாக்காளர்களை புதிதாக சேர்க்க அல்லது தகுதியற்ற வாக்காளர்களை நீக்க

### SIRக்குப் பிறகு சென்னை மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆர்.கே.நகர் | 56,916 |
| பெரம்பூர் | 97,345 |
| கொளத்தூர் | 1,03,812 |
| வில்லிவாக்கம் | 97,960 |
| திரு.வி.க. நகர் | 59,043 |
| எழும்பூர் | 74,858 |
| ராயபுரம் | 51,711 |
| துறைமுகம் | 69,824 |
| சேப்பாக்கம் | 89,241 |
| ஆயிரம் விளக்கு | 96,981 |
| அண்ணாநகர் | 1,18,287 |
| விருகம்பாக்கம் | 1,10,824 |
| சைதாப்பேட்டை | 87,228 |
| தியாகராயநகர் | 95,999 |
| மயிலாப்பூர் | 87,668 |
| வேளச்சேரி | 1,27,521 |

# வரைவு வாக்காளர் பட்டியல்

## மாவட்ட வாரியாக நீக்கப்பட்டவர்கள் பட்டியல்



| மாவட்டம் | நீக்கப்பட்டவர்கள் |
|---|---|
| திருவள்ளூர் | 6,19,777 |
| சென்னை | 14,25,018 |
| காஞ்சிபுரம் | 2,74,274 |
| வேலூர் | 2,15,025 |
| கிருஷ்ணகிரி | 1,74,549 |
| தருமபுரி | 81,515 |
| திருவண்ணாமலை | 2,52,162 |
| விழுப்புரம் | 1,82,865 |
| சேலம் | 3,62,429 |
| நாமக்கல் | 1,93,706 |
| ஈரோடு | 3,25,429 |
| நீலகிரி | 56,091 |
| கோவை | 6,50,590 |
| திண்டுக்கல் | 3,24,894 |
| கரூர் | 79,690 |
| திருச்சி | 3,31,788 |
| பெரம்பலூர் | 49,548 |
| கடலூர் | 2,46,818 |
| நாகப்பட்டினம் | 57,338 |
| திருவாரூர் | 1,29,480 |
| தஞ்சாவூர் | 2,06,503 |
| புதுக்கோட்டை | 1,39,587 |
| சிவகங்கை | 1,50,828 |
| மதுரை | 1,25,739 |
| தேனி | 1,89,964 |
| விருதுநகர் | 1,17,364 |
| ராமநாதபுரம் | 3,80,474 |
| தூத்துக்குடி | 1,62,527 |
| திருநெல்வேலி | 2,14,957 |
| கன்னியாகுமரி | 1,53,373 |
| அரியலூர் | 24,368 |
| திருப்பூர் | 5,63,785 |
| கள்ளக்குறிச்சி | 84,329 |
| தென்காசி | 1,51,902 |
| செங்கல்பட்டு | 7,01,871 |
| திருப்பத்தூர் | 1,16,739 |
| ராணிப்பேட்டை | 1,45,157 |
| மயிலாடுதுறை | 75,378 |

மொத்தம் நீக்கப்பட்டவர்கள் **97,37,831**

எந்த ஒரு வாக்காளரும், அரசியல் கட்சியும் தங்கள் ஆட்சேபனைகளை டிச.19ம் தேதி (நேற்று) முதல் ஜன 18ம் தேதி வரை தாக்கல் செய்யலாம். இதை ஆய்வு செய்ய 234 வாக்காளர் பதிவு அலுவலர்கள், 1,776 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

இந்த காலகட்டத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், வரும் ஜன.1ம் தேதி 18 வயது பூர்த்தி அடைந்த இளம் வாக்காளர்கள் படிவம் 6ஐ பூர்த்தி செய்து வழங்கலாம். வாக்காளர் பட்டியலில் நிரந்தர இடமாற்ற பதிவுகள், உயிரிழந்தோர் உள்ளிட்ட ஆட்சேபனை தொடர்பாக படிவம் 7ஐ பூர்த்தி செய்தும், தொகுதிகளிலேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் படிவம் 8ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகல்களை இணைத்து சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட, தொடர்புடைய பகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கலாம்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெறும்போது உரிய படிவங்களை பிஎல்ஓக்களிடமும் சமர்ப்பிக்கலாம். www.elections.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம். தமிழகத்தில் 68,467 வாக்குச்சாவடிகள் இருந்த நிலையில், தற்போது புதிதாக 6,568 வாக்குச் சாவடிகள் உருவாக்கப்பட்டு, மொத்தம் 75,035 சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கடந்த அக்.27 நிலவரப்படி, 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 584 வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. நடந்து முடிந்த எஸ்ஐஆர் திருத்தத்தின்படி, தமிழகத்தில் 2,66,63,233 ஆண் வாக்காளர்கள், 2,77,06,332 பெண் வாக்காளர்கள், 7,191 இதர வாக்காளர்கள் என மொத்தம் 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 756 வாக்காளர்களின் பெயர்கள் வரைவுவாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம்பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காத 66,44,881 பேர்,

RNI No. TNTAM / 2021 / 85933

இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் என மொத்தம் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக சோழிங்கநல்லூர், பல்லாவரம், ஆலந்தூர் தொகுதிகளில் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இந்த எஸ்ஐஆர் பணிகளின்போதே 5.19 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் இருந்து படிவம்6 பெறப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் ஜன18ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம், ஆட்சேபனைகளையும் வழங்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

எஸ்ஐஆர் பணிகளில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் 14.25 லட்சம் பேரும், குறைந்தபட்சமாக அரியலூர் மாவட்டத்தில் 24,368 பேரும் நீக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில் 2.18 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையம் சார்பில் வரும் ஜன.18ம் தேதி வரை பெறப்படும் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு, வரும் பிப்ரவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

## சர்வர்கள் முடங்கின

தங்கள் பெயர், வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ளதா எனதேர்தல் ஆணையம் மற்றும் தமிழக தலைமை தேர்தல் அலுவலக இணைய தளங்களை பொதுமக்கள் நேற்று மாலை முதல் பார்வையிட்ட நிலையில்,அந்தஇணையதளங்களின் சர்வர்கள் முடங்கின.

## குஜராத்தில் 73.73 லட்சம் நீக்கம்

நாடு முழுவதும் 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மாநிலமாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது. குஜராத்தில் ஏற்கெனவே 5.08 கோடி வாக்காளர்கள் இருந்தனர். அங்கு எஸ்ஐஆர் பணிகள் நவ.4ம் தேதி தொடங்கி, கடந்த 14ம் தேதி வரை படிவங்கள் பெறப்பட்டன. நேற்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 73.73 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 18 லட்சம் பேர் உயிரிழந்தவர்கள். அங்கு வாக்காளர்கள் எண்ணிக்கை 4.34 கோடியாக குறைந்துள்ளது. இதேபோல, மேற்கு வங்கத்தில் 58.20 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். இதுவரை வெளியான பட்டியல்படி, தமிழகத்தில் தான் அதிகபட்சமாக 97.37 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்நாடு சட்டப்பேரவை ஜனவரி 20ந் தேதி கூடுகிறது

## சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு




தமிழக சட்டசபை ஜனவரி 20ந் தேதி தொடங்கும் என்று சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய சபாநாயகர் அப்பாவு, “அடுத்தாண்டு 2026ன் முதல் சட்டசபை கூட்டம், ஆளுநரால் இந்திய அரசியலமைப்பு சட்டம் அறிவிப்பு 174 (1)ன் கீழ் ஜனவரி 20 ந்தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு சென்னை தலைமை செயலகம், சட்டசபை பேரவை வளாகத்தில் கூட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

அன்றைய தினம் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் தயாரித்து வழங்குகின்ற உரையை ஆளுநர் வாசிப்பார். இது காலை 9.30 மணிக்கு நிகழும். இந்த கூட்டம் எத்தனை நாட்கள் நடைபெறும் என்பதனையும், பட்ஜெட் குறித்தும் கவர்னர் உரைக்குபின் நடைபெறும் அலுவல் ஆய்வு கூட்டம் கூட்டி முடிவெடுக்கப்படும்." இவ்வாறு அவர் கூறினார்.

இந்தாண்டு நடந்த முதல் கூட்டத் தொடரில் தேசிய கீதம் முதலில் இசைக்கப்பட வேண்டும் எனக் கூறி ஆளுநர் ஆர்.என்.ரவி சபை யில் இருந்து வெளியேறியது குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்கள் இந்த முறை மரபுகள் ஏதும் மாற்றப்பட்டு இருக்கிறதா எனக் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த சபாநாயகர் அப்பாவு, “தமிழகத்தில் எந்த மரபுகளையும் மாற்ற மாட்டோம். அதே மரபுகளின்படி தான் நடக்கும். கவர்னர், சட்டப்பேரவையின் மாண்பை காப்பாற்றுவார் என நம்புகிறேன் என்றார்.

இந்நிலையில், 2026 தொடக்கத்தில் நடக்கும் இந்த சட்டப்பேரவை கூட்டத்தில், ஆளுநர் பேசுவாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி'



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயனின் நடித்துள்ள படம், 'பராசக்தி'. இது சிவகார்த்திகேயனின் 25வது படம். ஆகாஷ் பாஸ்கரனின் டான் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் அதர்வா, ரவி மோகன் மற்றும் பசில் ஜோசப் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்நாயகியாக ஸ்ரீலீலா நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.நாயகியாக ஸ்ரீலீலா நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்து முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிநடைபெற்று வருகிறது. அடுத்தாண்டு பொங்கல் விடுமுறையையொட்டி ஜனவரி 10ல் ஜனநாயகனுக்கு போட்டியாக இப்படம் ரிலீஸாக உள்ளது.இதனிடையே இப்படத்தின் அடி அலையே, ரத்னமாலா பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. இந்நிலையில் இப்படத்தின் மூன்றாவது பாடலான, நமக்கான காலம் பாடல் வெளியாகஉள்ளது. இப்பாடலும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.திரைப்படம் இன்னும் சில நாட்களில் வெளியாகவுள்ள நிலையில், படத்தின் புரோமோஷன்கள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.இந்நிலையில், வள்ளுவர் கோட்டத்தில் பராசக்தி படத்தின் நிகழ்ச்சி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் மொத்த படக்குழுவும்









கலந்து கொண்டு தங்களது அனுபவத்தைபகிர்ந்து வருகிறார்கள்.இந்நிலையில், இப்படத்தில் 60களின் காலகட்டத்தைக் கொண்டு வர பயன்படுத்தப்பட்டகார்கள், ரயில், ரயில் நிலைய செட் மற்றும் அந்தக்கால பொருட்களைவைத்து, 'பராசக்தி' பட உலகை செட் மூலம் வள்ளுவர் கோட்டத்தில் உயிர்ப்பித்துள்ளனர். பொதுமக்கள் பார்வையிடும் வகையில் இது கண்காட்சியாக உருவாக்கப்பட்டுள்ளதுபராசக்தி' படத்தின் படப்பிடிப்பு பொருள்காட்சியை இலவசமாக வரும் டிசம்பர் 28ம் தேதி வரை கண்டுகளிக்கலாம் என படக்குழு அறிவித்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் 'பராசக்தி' கண்காட்சியை ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டு வருவதாக இயக்குநர் சுதா கொங்கரா தெரிவித்துள்ளார். ●


கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323